# பெருமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கு - ஒன்றிய அரசு 1 ரூபாய் கூட நிவாரணம் வழங்கவில்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

5ஆம் பக்கத் தொடர்ச்சி

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இருக்கின்ற சிறு தொழில் நிறுவனங்கள் தங்களுடைய வணிகத்தை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக கடன் வழங்கப்படும் என்று நான் ஏற்கனவே அறிவித்தபடி, 6 விழுக்காடு சிறப்புச் சலுகை வட்டி விகிதத்தில், இந்த இரண்டு மாவட்டங்களிலும், 670 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 18 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

**ஒரு ரூபாய் கூட கொடுக்காத ஒன்றிய அரசு!**

இதனால், இந்த மாவட்டங்களைச் சார்ந்த உப்பு உற்பத்தியாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு சிறுதொழில் செய்வோர் பயனடைந்து இருக்கிறார்கள். இவை எதற்கும் ஒன்றிய அரசு ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அதுதான் முக்கியம். ஒன்றிய அரசு ஒரு ரூபாய்கூட கொடுக்காத போதும், இது யார் கொடுத்தது என்றால், இந்த ஸ்டாலின் உங்களுக்காகக் கொடுத்தது! இந்த அரசு உங்களுக்காகக் கொடுத்தது.

**தூத்துக்குடிக்கான அறிவிப்புகள்!**

இந்த அளவுக்கு அளப்பரிய நலத் திட்டங்களை நம்முடைய அரசு வழங்கியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மக்களுடைய நலன் கருதி, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் சில அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலில் தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும்,

- விளாத்திகுளம் வட்டம், வேம்பாரில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "வேம்பார் பனைப்பொருட்கள் குறுங்குழுமம்" அமைக்கப்படும்.

கோவில்பட்டி பகுதியில 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "கோவில்பட்டி கடலைமிட்டாய் குறுங்குழுமம்" அமைக்கப்படும்.

இந்தக் குழுமத்துக்கான பொது வசதி மையத்தில் மூலப்பொருட்களை தரம் பிரிக்கின்ற வசதி, தானியங்கி பேக்கிங் கூடங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான கண்காட்சிக் கூடம் ஆகியவை அமைக்கப்படும்.

- தூத்துக்குடியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் 50 ஆயிரம் சதுர அடியில் வர்த்தக வசதிகள் மையம் சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இவையெல்லாம் தூத்துக்குடி மாவட்டத்துக்கு என்றால், திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும்,

**திருநெல்வேலிக்கான அறிவிப்புகள்!**

- அம்பாசமுத்திரத்திற்கு புதிய மருத்துவமனைக் கட்டடம், வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவை அமைக்கப்படும்.
- அம்பாசமுத்திரம் புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்த கண்டிய பேரி அரசு மருத்துவமனைப் பணிகள் நிறைவடையும் நிலையில் இருக்கிறது. அது விரைவில் திறக்கப்பட இருக்கிறது.
- மீனவக் கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- அதி கனமழையால் பெரிய பாதிப்பை அடைந்திருக்கின்ற மாஞ்சோலை சாலை 5 கோடியே 4 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.
- திருநெல்வேலி மாநகருக்கான மேற்கு புறவழிச் சாலைப் பணிகளுக்கான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது.

விரைவில் இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுப் பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவை எல்லாமே தமிழ்நாடு அரசின் மாநில நிதியில் இருந்து செய்து தரப்படுகிறது.

இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடர்களை கடந்த டிசம்பர் மாதம் சந்தித்தோம். இதனால், ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய ஒன்றிய அரசிடம் 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை நாம் கேட்டோம்.

**அவர் வகிக்கின்ற பதவிக்கு அழகல்ல!**

ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை என்பது மட்டும் இல்லை; தேர்தல் வரப்போகிறதே வாக்கு கேட்டு தமிழ்நாட்டு மக்களைச் சந்திக்க வேண்டுமே என்ற பயம்கூட கொஞ்சமும் இல்லாமல் ஒன்றிய அரசும், நிதிஅமைச்சரும் பாராமுகமாக இருக்கிறார்கள்!

நாம் இதைக் கேட்டால் என்ன சொல்கிறார்கள்? 'உங்களுக்குச் சாதுரியம் இருந்தால் நீங்கள் சாதித்துக் கொள்ளலாமே' என்று மிகவும் ஆணவமாக அவர் பேட்டி அளித்திருக்கிறார். இது அவர் வகிக்கின்ற பதவிக்கு அழகு அல்ல!

எங்களிடம் சாதுரியம் இருப்பதால்தான் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டியிருக்கிறோம். உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் பலவும் தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கு தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். என்ன காரணம்? எங்களுடைய வளர்ச்சியைப் பார்த்துத்தானே வருகிறார்கள்!

தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முதலிடத்தை நோக்கி முன்னேறிக்கொண்டு இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், திராவிட மாடல் அரசின் சாமர்த்தியம்தானே!

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இடைக்காலத் தடைகளையும் தாண்டித்தான் இந்த வெற்றியைப் பெற்று வருகிறோம். எத்தகைய இடர் வந்தாலும், யாரையும் எதிர்பார்த்துக் காத்திருக்காமல், மக்கள் பணியாற்றும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி!

உங்களுக்காகக் களத்தில் இருக்கின்ற ஆட்சிதான், தி.மு.க. ஆட்சி! உங்கள் குடும்பங்களில் ஒருவனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றும் இருப்பேன்...! இருப்பேன்...! இருப்பேன்...!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில் திண்ணைப் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*கடலூர், செப். 25 -*

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இன்று (26.2,2024 - திங்கட்கிழமை) அன்று மாலை முதல் 27, 28 ஆகிய மூன்று நாட்களும் மாலை 4.00 மணி முதல் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்களை இல்லந்தோறும் சென்று வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளள்ளார்.



அது வருமாறு: .-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இன்று (26.2,2024 - திங்கட்கிழமை) அன்று மாலை முதல் 27, 28 ஆகிய மூன்று நாட்களும் மாலை 4.00 மணி முதல் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்களை இல்லந்தோறும் சென்று வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் 20242025ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும் இல்லந்தோறும் கொண்டு சேர்க்கவும், அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கவும். பிரச்சாரம் மேற்கொள்ளும்போது குடும்பத்தலைவிகளிடம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், கல்லூரி மாணவியர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் "புதுமைப் பெண் திட்டம்", பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லா பயணம், சிறார்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டம், மேலும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்த கல்லூரி மாணவர்களுக்கான மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'தமிழ்ப்புதல்வன் திட்டம்', குடிசை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டித் தரும் 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம், வறுமை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டம் என்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனை திட்டங்களை எடுத்துக் கூற வேண்டும்.

அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, வட்டம், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஒன்றிய குழுத் தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவர் அணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், BLA 2, BLC (பூத் கமிட்டியினர்), கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் குரல் டெல்லியிலும் நிறைவேறுவதை உறுதிசெய்திடும் வகையில் சிறப்பாக பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

### வத்தலக்குண்டு வடக்கு, வத்தலகுண்டு தெற்கு, நிலக்கோட்டை வடக்கு, நிலக்கோட்டை தெற்கு, நிலக்கோட்டை மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

#### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள வத்தலகுண்டு ஒன்றியம், **வத்தலக்குண்டு வடக்கு, வத்தலக்குண்டு தெற்கு** ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாகவும்;

நிலக்கோட்டை வடக்கு, நிலக்கோட்டை தெற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், நிலக்கோட்டை தெற்கு, **நிலக்கோட்டை வடக்கு, நிலக்கோட்டை மேற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வொற்றியங்களுக்கான ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட **வத்தலக்குண்டு வடக்கு, வத்தலக்குண்டு தெற்கு நிலக்கோட்டை தெற்கு, நிலக்கோட்டை வடக்கு, நிலக்கோட்டை மேற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் 1.எழுவனம்பட்டி, 2.கட்டக்காமன்பட்டி, 3. பழையவத்தலக்குண்டு, 4. ஜி.தும்மலப்பட்டி, 5.கணவாய்பட்டி, 6.செங்கட்டாம்பட்டி, 7.கோட்டைப்பட்டி, 8.விராலிபட்டி ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வத்தலக்குண்டு, சேவுகம்பட்டி, பட்டிவீரன்பட்டி ஆகிய 3 பேரூர்கள்.

**வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **கே.பி.முருகன்,** காந்தி நகர் மெயின் ரோடு, கணவாய்பட்டி, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம் 624 202.

**வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் 1.நடகோட்டை, 2. விருவீடு, 3. விராலியமாயன்பட்டி, 4.சந்தையூர், 5.ரெங்கப்பநாயக்கன்பட்டி, 6. கோம்பைப்பட்டி, 7. மல்லணம்பட்டி, 8.செக்காபட்டி, 9. குன்னுவராயன்கோட்டை ஆகிய 9 ஊராட்சிகள்.

**வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **நா.கனிக்குமார்,** 1/151, மேற்குதெரு, விராலிமாயன்பட்டி & அஞ்சல், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 220.

**நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1. குல்லலக்குண்டு, 2.பள்ளபட்டி, 3. சித்தர்கள்நத்தம், 4.பிள்ளையார்நத்தம், 5.எஸ்.மேட்டுப்பட்டி, 6.எத்திலோடு, 7. விளாம்பட்டி, 8.மட்டப்பாறை, 9.ராமராஜபுரம் ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் நிலக்கோட்டை பேரூர்.

**நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம்:**

பொறுப்பாளர்: **மா.மணிகண்டன்,** புதுரோடு, பாரதிபுரம் சாலை, பள்ளப்பட்டி & அஞ்சல், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் 1.பச்சமலையான்கோட்டை, 2. ஜம்புதுரைக்கோட்டை, 3.நரியூத்து, 4.வீலிநாயக்கன்பட்டி, 5.சிலுக்குவார்பட்டி, 6. மாலையகவுண்டன்பட்டி, 7.நக்கலூத்து ஆகிய 7 ஊராட்சிகள்.

**நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **சி. சௌந்தரபாண்டியன்,** செம்பட்டி, போலீஸ் ஸ்டேசன் அருகில், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம்- 624 707.

**நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் 1. கோட்டூர், 2.நூத்தலாபுரம், 3.கோடாங்கிநாயக்கன்பட்டி, 4.கூவனூத்து, 5.முசுவனூத்து, 6.சிவஞானபுரம்,7. குல்லிசெட்டிபட்டி ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் அம்மையநாயக்கனூர் பேரூர்.

**நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர்: **பெ. கரிகாலபாண்டியன்,** 5/153, செங்கோட்டை, கோட்டூர் & அஞ்சல், நிலக்கோட்டை வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 24.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## கடலூர் மேற்கு மாவட்டத்தில் திண்ணைப் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

*கடலூர் செப்டம்பர் 26.*

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலோடு கடலூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (26.2.2024 - திங்கட்கிழமை) முதல் 27மற்றும் 28 ஆகிய மூன்று நாட்கள் காலை 8 மணி முதல் கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக இல்லம் "தோறும் ஸ்டாலின் குரல்" என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கிட வேண்டுமென கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கடலூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (26.2. 2024 - திங்கள் கிழமை) 4 மணி அளவில் எனது தலைமையில் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மங்களூர் ஒன்றியம் மலையனூரில் "இல்லந்தோறும் ஸ்டாலின் குரல்"என்றபிரச்சாரத்தை, தொடங்கி வைக்கிறேன்.

அது போன்று 26, 27, 28.ஆகிய மூன்று நாட்களும் திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டு ஆகிய இடங்களில் திண்ணை பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என அந்தந்த ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக செயலாளர்களையும் நிர்வாகிகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

கழக அரசின் சாதனைகளை இல்லம் தோறும் எடுத்துரைக்கும் போது விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு மோட்டார் வழங்கியது, குடும்பத் தலைவிக்கு உரிமை தொகையாக மாதந்தோறும் ஆயிரம் வழங்கியது, மகளிர்க்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணத்திட்டம், மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம் 2 மாணவர்களை தனியார் துறையில் பணி அமர்த்தியது மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் திறன் அளித்தது, மாதம்தோறும் மாணவியர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கி புதுமைப்பெண் திட்டம், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 2024 -25 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் குடிசை இல்லா தமிழ் நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டி தரும் கலைஞரின் கனவு திட்டம் வறுமை இல்லா தமிழ் நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழை குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் போன்ற எண்ணற்ற சாதனைகளை கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியினை பொதுமக்களிடம் திண்ணை பிரச்சாரமாக மேற்கொள்ள வேண்டும் என கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக கிளை கழக வார்டு கழக, செயலாளர் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் இந்த திண்ணைப் பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபட்டு பொதுமக்களிடம் மிகவும் சிறப்பாக எடுத்துரைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி. வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்

#### தலைமைக் கழக அறிவிப்பு

**சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அ.ஜாபர் சாதிக், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார். இவரோடு கழகத்தினர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.02.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

## கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!



கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழுக்கூட்டம் நாளை (27.02.2024 செவ்வாய் கிழமை) காலை: 11 மணியளவில் காடாம்புலியூர் A.V. திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் டாகடர். கோ.நந்தகோபாலகிருஷ்ணன் . தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள்,இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு , பொதுகுழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தொ மு ச நிர்வாகிகள் திட்டக்குடி, விருத்தாசலம் , நெய்வேலி, பண்ருட்டி, சட்ட மன்ற தொகுதியின் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (BLA2) மற்றும் 10 வாக்குச்சாவடிக்கு ஒருவர் என நியமன செய்த ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக மூத்தமுன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. மார்ச் 01 கழக தலைவர், முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா.

2. நாடாளுமன்றத் தேர்தல் குறித்து,

3. கழக ஆக்கப்பணிகள்

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.